# செல்லம்மாள் மகளிர் கல்லூரி

(தேசியத் தர மதிப்பீட்டில் 'பி' தரச்சான்று பெற்றது)

**பச்சையப்பன் அறக்கட்டளை நிறுவனம்**

சென்னைப் பல்கலைக்கழக அங்கீகாரத்திற்குட்பட்டது

112, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.

**☎ : 22351217**

மின்னஞ்சல் **: cwc1971@yahoo.com**

# கல்லூரிக் கையேடு

## 2025 - 2026

# கையேடு தயாரிப்புக் குழு

முனைவர். **வே. மலர்விழி,**

எம்.எஸ்ஸி., எம்ஃபில்., பிஎச்.டி.

முதல்வர்

முனைவர். **சு. செந்தில் குமாரி,**

எம்.எஸ்ஸி., எம்ஃபில்., எ.டபிள்யூ.சி., பிஎச்.டி.

முனைவர். **மரியா ஃபெல்சி ராசாத்தி .ம,**

எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.

முனைவர். **சா. வனிதா,**

எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.



## நாட்டுப் பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே

– மகாகவி இரவீந்தரநாத் தாகூர்

## நாட்டுப் பண் பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய். நின் திருப் பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது

நின் திருப்பெயர் விந்திய இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது. யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது. இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன. நின் புகழைப் பரப்புகின்றன.

இந்தியாவின் இன்பதுன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

- மனோன்மணீயம் பெ. சுந்தரம் பிள்ளை

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து, வலுப்படுத்தச் செயற்படுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்.

ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம் மொழி வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும், அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

★★★

## உள்ளடக்கம்


1. கல்லூரி சின்னமும் வண்ண அமைப்பும்
2. செல்லம்மாள் துதி
3. தன் விவரக் குறிப்பு
4. பச்சையப்பர் அறங்காவலர் குழு
5. பச்சையப்பர் வரலாறும் அறக்கட்டளை உருவாக்கமும்
6. செல்லம்மாள் மகளிர் கல்லூரி வரலாறு
7. முதல்வர் தொடர்பட்டியல்
8. கல்லூரி ஆட்சிக்குழு
9. கல்லூரி ஆலோசனைக் குழு
10. கல்லூரி நிர்வாக இயக்கம்
11. பேராசிரியர்கள் பெயர்பட்டியல்
12. தற்காலிக முழுநேர பேராசிரியர்கள் பெயர்ப்பட்டியல்
13. அலுவலர்கள் பெயர் பட்டியல்
14. சுழற்சி I பாடப்பிரிவுகள்
15. கட்டண விதிமுறைகள்
16. கல்லூரி சேர்க்கை விதிகள்
17. உதவித் தொகைகள்
18. அறக்கட்டளைப் பரிசுகள்
19. வருகைப் பதிவு விதிகள்
20. நடத்தை விதிகள்
21. நூலக விதிகள்
22. தேர்வுகள்
23. தனிக்கவனம் சார் பயிற்சி
24. பணிவாய்ப்பகம்
25. விளையாட்டுத் துறை
26. நாட்டு நலப்பணித் திட்டம்
27. சுழற்சி - II
28. பேராசிரியர்கள் பெயர்ப்பட்டியல் சுழற்சி - II
29. அலுவலர்கள் பெயர்ப்பட்டியல் சுழற்சி - II
30. சுழற்சி - II பாடப் பிரிவுகளும், கட்டணங்களும்
31. நாட்காட்டி
32. மொத்தப் பணி நாட்கள்

## கல்லூரிச் சின்னமும் வண்ண அமைப்பும்

கேடயத்தின் மேற்பகுதியில் ஆற்றலைக் குறிக்கும் எழுஞாயிறும், இடப் பக்க மூலையில் பழமைச் சிறப்புமிக்க தூண்களோடு கூடிய, பச்சையப்பன் கட்டிடமும், வலப் பக்க மூலையில் நந்தா அறிவுச் சுடரும் இடம் பெற்றுள்ளன. தேசிய மலராகிய தாமரை எஞ்சிய பகுதியில் தீட்டப்பட்டுள்ளது. கீழே எண்ணத்தின் வழி செயல் “MENS AGITAT MOLEM” (Mind Moves Matters) என்னும் புகழ் வாய்ந்த பொன்மொழி எழுதப் பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| ஞாயிறு | - | செந்நிறக் கதிர்கள் அதில் மஞ்சள் வண்ணத்தில் ஞாயிறு |
| கல்லூரி | - | வெளிர் பச்சை நிறப் பின்னணியில் வெண்மை வண்ணத்தில் கல்லூரிக் கட்டிடம். |
| சுடர் | - | ஒண் சிவப்பு வண்ணத்தில் சுடர் ; செழுமை ; மிக்கத் தங்க நிற வண்ணத்தில் கைப்பிடி ; செந்நிற ஒளிக்கற்றைகள் சாம்பல் நிறப் பின்னணியில் KNOWLEDGE என்னும் ஆங்கிலச் சொல். |
| தாமரை | - | ஒண் சிவப்பு நிறத்தில் தாமரை இதழ்கள்; பச்சை கலந்த நீலவண்ணக் கீற்றுகளுடன் தண்ணீர்; செழும்பச்சை நிறத்தில் இலைகள் இவை அனைத்திற்கும் பின்னணி வெள்ளி நிறவெண்மையாகும். |
| கரைகள் | - | செழுங்கருமை நிறத்தில் கரைகள். |
| பொன்மொழி | - | ஊதா அல்லது கருப்பு கரைகளோடு பச்சை நிறப் பின்னணியில் வெண்மை நிறத்தில் எழுதப்பட்ட பொன்மொழி. |

## செல்லம்மாள் துதி

கல்வி தந்த அன்னையே உன்னை
வணங்கியே நின்றிடுவோம்-நம்
பெண்டிர் வாழ்வது உயர (2)

ஆவன செய்தாய் ஆஹா வியந்தோம்
ஆவணம் செய்தாய் ஆஹா வியந்தோம்....(கல்வி)

செல்லம்மாளெனும் பெயர் கொண்டாய்
செல்லும் வழிக்கே புகழ் சேர்த்தாய் (2)

தன்னை வென்றாளும்-கல்வி பெற்றிங்கே
தரணியில் உயர்ந்திடுவோம் (2)
தரணியை உயர்த்திடுவோம்....(கல்வி)

பச்சையப்பர் கொடைதனிலே
இணைத்தே யமைத்தாய் உன் கொடைதனையே (2)

தன்னிகரில்லாத தன்மை பெற்றிங்கே
தரணியில் உயர்ந்திடுவோம் (2)
தரணியை உயர்த்திடுவோம். (கல்வி)

முனைவர். **இரா. தமிழரசி,** எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர் (ஓய்வு)

## பச்சையப்பன் அறங்காவலர் குழு

### உறுப்பினர்கள்

1. நீதியரசர் திரு. **வா. பார்த்திபன்**
   நிர்வாகி

2. திரு. **சி. துரைக்கண்ணு,** பி.இ., எம்.ஐ.இ.
   செயலாளர்

# தன் விவரக் குறிப்பு

1. பெயர் ..........................................................................

2. வகுப்பு..........................................................................

3. முகவரி..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

4. தந்தை பெயர், அலுவலக முகவரி

..........................................................................

..........................................................................

5. தாய் பெயர், அலுவலக முகவரி

..........................................................................

..........................................................................

6. பாதுகாவலர் பெயர், அலுவலக முகவரி

..........................................................................

..........................................................................

7. தந்தை அலுவலகம் ✆ ..................................................

தாய் அலுவலகம் ✆ ..................................................

வீடு ✆ ..................................................

8. குருதி வகை ..........................................................................

9. பல்கலைக்கழகப் பதிவு எண்..................................................

# பச்சையப்பர் வரலாறும் அறக்கட்டளை உருவாக்கமும்

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

- மகாகவி பாரதியார்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாய் உயர்ந்தவர் வள்ளல் பச்சையப்பர். இவர் தம் அறங்கள் யாவும் இறைப்பணியுடன் இணைந்து இயங்கும் இந்து நிறுவனங்களாக விளங்குகின்றன. இந்நிறுவனங்கள் இந்து சமயத்தவர் அடங்கிய அறக்கட்டளைக் குழுவால் நிர்வகிக்கப் படுகின்றன.

**பச்சையப்பரின் வாழ்க்கை (1754-1794)**

நகரங்களில் தலைசிறந்ததாகக் கருதப்படும் காஞ்சிபுரத்தின் வடகிழக்கே நாற்பது மைல் தொலைவில் உள்ள பெரியபாளையம் என்ற ஊரில் 1754-ஆம் ஆண்டு தோன்றினார் பச்சையப்பர். இவரது தந்தையார் காஞ்சிபுரம் விசுவநாத முதலியார். தாயார் பூச்சி அம்மாள். தாம் பிறப்பதற்குச் சில தினங்கட்கு முன்பே தந்தையாரை இழந்தார் பச்சையப்பர். எனவே தாயார் இவருக்கு ஐந்து ஆண்டு நிரம்பியபோது இவரையும் இவரது இரு தமக்கையாரையும் உடனழைத்துக்கொண்டு, சென்னை வந்தடைந்தார். இவர்கள் அங்கு சாமி மேஸ்திரி தெருவில் ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தனர்.

அக்காலத்தில் செல்வாக்கு மிகுந்த ஆங்கில வணிகர்களுக்கு, வணிகத்தில் உதவி புரிந்து கொண்டு, மொழி பெயர்ப்பாளராகவும் விளங்கினார் நாராயணப்பிள்ளை என்ற செல்வர். அவரிடம் சிறுவர் பச்சையப்பர் அடைக்கலம் புகுந்தார். நாராயணரும் தமக்கே உரிய பெருந்தன்மையுடன் அவருக்கு ஆதரவுக்கரம் நீட்டி அன்புடன் போற்றி கணிதத்திலும் ஆங்கில

மொழியிலும் தேர்ந்து விளங்கிட தேவையான ஏற்பாடுகளைச் செய்தார்.

பச்சையப்பர் ஆங்கிலத்தை ஆர்வத்துடன் கற்றதோடு வணிகத் தொழிலுக்கான ஊக்கத்தையும், உழைப்பையும் தொடக்கத்திலேயே காட்டினார். முதற்கண் சென்னையில் உள்ள ஆங்கில வணிகர்கள் இறக்குமதி செய்தபொருட்களை விற்கவும், ஏற்றுமதிப் பொருட்களைத் தொகுக்கவும் சிறிய அளவில் செயல்படும் முகவரானார். பின்னர் நாராயணப் பிள்ளை அவர்கள் முயற்சியால் அக்காலத்தில் தமிழ் மாவட்டங்களில் வணிகம் புரிந்த நிக்கோலசு என்பவருக்கு மொழிபெயர்ப்பாளரானார். இந்நிலையில் தென்மாவட்டங்களில் பரவலாகப் பயணம் செய்து கணிசமான பொருளும் ஈட்டினார். இளம் வயதிலிருந்தே இறைப்பற்றும் நம்பிக்கையும் நிரம்பியவராக இருந்த பச்சையப்பர், தமது இருபது வயதிலேயே காஞ்சி ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் திருமண மண்டபம் ஒன்றைக் கட்ட நிதியுதவி நல்கினார். அக்கோயிலில் இரு புனித உருவங்களும் நிறுவப் பெற்றன. திருக்குடநீராட்டு விழாவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

1776-ஆம் ஆண்டில் பச்சையப்பர் செங்கல்பட்டு மாவட்டத்தில் தம் வணிகத் தொடர்புகளை விரிவாக்கினார். கடன் கொடுக்கல் வாங்கலில், அது தொடர்பான கணக்கு வழக்குகளில் சிறந்த தீர்வு காண்பவர் என்ற பெயரும் பெற்றார். கிழக்கு இந்தியக் கம்பெனியாருக்குப் பல கிராமங்கள் செலுத்த வேண்டிய நிலவரித் தொகையைத் தாம் ரொக்கமாகச் செலுத்துவதாக உறுதி கூறி அவ்வாறே செய்யும் பணியிலும் ஈடுபட்டார். ஆங்கில வணிகருக்கும் கர்நாடக நவாப்பின் அரசியல் அலுவலர்க்கும் இடையில் பணியாற்றி இருதரப்பினரின் பாராட்டுக்களையும் பெற்றார். இதன் பின்னர் குறுகிய அரசியல் பிரதிநிதியாகப் பொறுப்பு வகித்தவரும், கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆட்சிக் குழு உறுப்பினருமானஆர்.ஜே. சல்லிவன் திருச்சியில் முதன்மை அரசு நிர்வாகியானபோது, படைகளுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதில் அவருக்குத் துணையாளரானார்; அப்பணியில் பச்சையப்பர் காட்டிய அக்கறையும் செயல்திறனும், பெற்ற வெற்றியும் அதிகாரிகளின் பாராட்டுக்களை அவருக்குப்

பெருமளவில் பெற்றுத் தந்தன.

பின்னர் தஞ்சை மன்னருடன் பச்சையப்பர் தொடர்புகொண்டார். தஞ்சை மன்னர் ஆண்டுக்குரிய வரிப்பணத்தை ஒரே சீராகவும், பெருந்தொகையாவும் செலுத்த முடியாமல் இடர்ப்பட்டார். சீரான தவணைகளில் செலுத்துவதற்கு அவருடைய முகவராகப் பச்சையப்பர் செயல்பட்டார். செலுத்தும் தொகையில் பத்து முதல் இருபது விழுக்காடு தமக்குரிய தரகுத் தொகையாகப் பெற்றார். கர்நாடக நவாப்பின் ஆளுகைக்குட்பட்ட தென்பகுதியில் இருந்த பல பாளையக்காரர்களுக்குக் கணக்கு வழக்குகளில் சிறந்த தீர்வு காண்பவராகவும் விளங்கினார். இவ்வாறு பல வழிகளில் செயலாற்றி, சுமார் இருபது லட்சம் வரை ஈட்டிப் பெருஞ் செல்வந்தரானார். தமக்காகச் சென்னை கோமளீஸ்வரன் பேட்டையில் மிகப் பெரிய வீடு ஒன்றையும் கட்டினார். இன்றும் அப்பகுதியில் ஒரு தெரு இவர் பெயரால் அழைக்கப்படுகிறது.

1787-ஆம் ஆண்டு அமர்சிங் தஞ்சை மன்னரானார். அன்றைய சென்னை ஆளுநர் சர். ஆர்ச் பால்ட் கேம்பெல் தஞ்சையில் வருவாய்த்துறை ஆணையராயிருந்த வில்லியம்பெட்ரிக்கு என்பவருக்கு பணித் துணைவராகப் பச்சையப்பரை நியமித்தார். அச்சமயம் இவர் தஞ்சை மன்னரின் அரசவையிலேயே தங்கித் தம் பதவிக்குரிய மரியாதைகளுடன் பெருமதிப்பிற்குரியவராக வாழ்ந்து வந்தார்.

பச்சையப்பரின் தகுதியும் பெருமையும் ஆங்கில வணிகர் சிலரை அவர்பால் பொறாமை கொள்ளச் செய்தன. எனவே அவர்கள், பச்சையப்பர் தஞ்சை மன்னருக்கு அதிக வட்டிக்குப் பணத்தைக் கடனாக வழங்கி, அதன் மூலம் மன்னரின் வீண் ஆடம்பரச் செலவிற்குக் காரணமாக இருக்கின்றார் என்று அரசிடம் குற்றம் சாட்டினர். மேலும், இத்தகையோரைத் தஞ்சையிலிருந்து விலக்குவதே மக்களுக்கும், மன்னருக்கும் நன்மை பயக்குமென ஆலோசனை கூறினர். இதனால் பச்சையப்பர் சென்னைக்கு வந்து, தஞ்சை அரசவையில் தமக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிறப்புத் தகுதிகள் சர்.ஆர்ச். பால்ட் கேம்பல்லின் ஆணையென்றும், தம்மை பதவியிலிருந்து விலக்குவது மேற்குறித்த ஆணைக்குப் புறம்பான செயலாகும் என்றும் விளக்கினார். விசாரணைக்குப் பின் 1791-ஆம்

ஆண்டில் பச்சையப்பர் குற்றமற்றவர் என்பது உறுதியாயிற்று.

பச்சையப்பர் சென்னையில் தங்கியிருந்தபோதுதான் 1791-ஆம் ஆண்டில் சிதம்பரம் சபாநாயகர் கோயிலில் அறக்கட்டளையை உருவாக்கி அறங்கள் பல செய்தார். உள்கருவறையைத் தூய்மையாக்கி அழகூட்டவும் கிழக்குகோபுரத்தின் மேற்பகுதியைப் புதுப்பிக்கவும் ஏற்பாடுகள் செய்தார். இக்கோபுரத்தின் நுழைவாயிலில் பச்சையப்பரின் உருவத்தையும், இவர் தமக்கை சுப்பம்மாளின் உருவத்தையும் இன்றும் காணலாம். அன்றாடம் நிகழும் இறைவழிபாட்டின் போது பயன்படுத்துவதற்கெனப் பல வெள்ளிக் கலங்களையும் வழங்கினார். ஆனித் திருமஞ்சனம் என்ற விழா ஆண்டுதோறும் தடையில்லாது நடக்க, தக்க பொருளுதவியைத் தம் பிற்கால விருப்ப ஆவணத்தில் (உயிலில்) எழுதி முறையாகச் செயல்படச் செய்தார்.

1792-ஆம் ஆண்டு தஞ்சைக்குத் திரும்பிய பச்சையப்பர் மீண்டும் தம் பணிகளைத் தொடர்ந்ததுடன் வங்கிப்பணியையும் மேற்கொண்டார்.

பச்சையப்பர் முதலில் தம் தமக்கையின் மகளை மணம் புரிந்தார். மகப்பேறு இன்மையால் தஞ்சையில் இரண்டாவது மணம் புரிந்து கொண்டார். ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையுமானார். இதன் பின் சில நாட்களில் இவரது உடல்நலம் குன்றியது. நோய் முற்றியதால் மருத்துவ வசதிக்காக கும்பகோணம் சென்றார். அங்கு தங்கிய குறுகிய காலத்தில் சில ஆண்டுகளுக்கு முன், தாம் தொடங்கியிருந்த சத்திரத்தைக் கட்டி முடித்தார். இவ்விடத்தில்தான் அன்னாரது புகழ்பெற்ற விருப்ப ஆவணம் (உயில்) 1792-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ஆம் நாள் உருவாயிற்று.

தமக்கு ஆண்மகவு இல்லாத நிலையில் தாம் ஈட்டிய செல்வம் அனைத்தையும் பற்றற்ற மனத்துடன் துறந்து சிவபெருமானின் புனித சேவைக்கும், திருமாலின் திருப்பணிகட்கும் பல்வேறு கோயில்கள் மற்றும் புனிதத் தலங்களில் உள்ள அறங்களுக்கும் சமயச்சார்பான கட்டிடங்களைக் கட்டுவதற்கும் ஏழை மக்களுக்கான கொடைப் பணிகளுக்கும், வடமொழிக் கல்வி கூடங்களுக்கும் மற்றும் பல பொதுவான அறப்பணிகளுக்கும் அர்ப்பணித்தார்.

1794 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ஆம் நாள் தம் பாதுகாவலரான நாராயணருக்குத் தாமே கடிதம் ஒன்றை எழுதி அனுப்பினார். அதில் தம் முடிவு நெருங்குவதாகவும், தம் விவகாரங்களை உரிய முறையில் முடிக்குமாறும் தாம் பிறருக்கு தரவேண்டிய ஒவ்வொரு காசையும் உரியவர்களுக்குத் திருப்பித் தரும்படியும் வேண்டிக் கொண்டார். பிறகு தஞ்சையில் வடமேற்கில் உள்ள புனிதத்தலமான திருவையாறு அடைந்து அங்கேயே மார்ச் திங்கள் 27-ஆம் நாள் இறையடி சேர்ந்தார். இவ்வுலக வாழ்வை நீத்தபோது அவருக்கு வயது நாற்பதேயாகும்.

பச்சையப்பரது விருப்பப்படி பயனடைந்த புனிதத்தலங்கள், சிதம்பரம் சீர்காழி, திருவிடைமருதூர், கும்பகோணம், திருவாடி, ஜம்புகேஸ்வரம், காஞ்சிபுரம், திருவெற்றியூர், திருவண்ணாமலை, திருவரங்கம், திருவாரூர், தஞ்சாவூர், மதுரை, இராமேசுவரம், திருவல்லிகேணி, வடகாசி ஆகியன.

பச்சையப்பர் தம் காலத்து முன்னணி, 'துபாஷி'களில் (வணிகத் துறைசார்ந்த மொழிபெயர்ப்பாளர்) முதன்மையானவராய்த் திகழ்ந்தார். அன்புள்ளம், அயரா உழைப்பு, எளிமை, இனிமை, ஏழையரிடத்தில் இரக்கம், இறைப்பற்று ஆகிய குணங்களின் உருவமாக விளங்கினார். இவர் தம் செல்வம், செல்வாக்கு அனைத்தையும் ஏழையர் துயர் துடைக்கவே பயன்படுத்தினார். நாட்டு மக்கள் நலம் கருதியே எச்செயலும் செய்தார். அழகிய மேனி வண்ணமும், அகன்ற நெற்றியும், அறிவொளி வீசும் கண்களுமாய் விளங்கிய அவர், தோற்றத்திலும் உடையணிவதிலும் எளியவராய் எண்ணத்தில் உயர்ந்தவராய், அனைவரையும் ஈர்த்தார். செல்லும் இடங்களிலெல்லாம் சீரும், சிறப்பும் பெற்றார். தன்னம்பிக்கையாலும், தளராமுயற்சியாலும் தரணியில் உயர்ந்தோருக்கு என்றும் எடுத்துக்காட்டாக விளங்கினார். ஏழ்மையில் தோன்றி வறுமையில் மலர்ந்த அவர் தம் தாளாண்மையாலும் அறிவாண்மையாலும் படிப்படியாக உயர்ந்து தம் காலத்துப் பெருஞ் செல்வருள் ஒருவராய் வாழ்ந்து, இல்லாதார் வாழ்வுக்கும் வழங்கி வணக்கத்திற்குரிய வள்ளலானார்.

அந்நாட்களில் விருப்ப ஆவணங்களைப் பற்றிப் பலர் அறியாதிருந்தனர். அவை முறையாகப் போற்றப்படவில்லை. இத்தகைய போக்காலும், சட்ட சிக்கல்களாலும் வழக்குகளாலும் பச்சையப்பர் விருப்ப ஆவணத்தில் கண்ட அறங்களை நீண்ட காலம் செயல்படுத்த இயலாமல் போயிற்று. இறையருளால் இச்செய்தி அன்றைய அரசாங்கத் தலைமை வழக்கறிஞராய் இருந்த அர்பார்ட்காப்பர் கவனத்திற்கு வந்தது. அவர் உச்சநீதி மன்றத்தில் இச்செய்தியை தாக்கல் செய்து, பச்சையப்பர் அறக்கட்டளையைச் செயல்படுத்தி வந்த நபருக்கு எதிராகத் தீர்ப்பாணையைப் பெற்றார். இந் நபரிடமிருந்து ஓரளவு பொருளே மீட்கப்பட்டது. அடுத்து வந்த வழக்கறிஞர் எட்டு லட்சம் பெறுமான நகைகளை மீட்டார்.

இதன் பின் உயர்நீதிமன்றம் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி 1841ஆம் ஆண்டு ஒரு திட்டத்தை உருவாக்கியது. விருப்ப ஆவணத்தில் குறித்துள்ளவைக்கு மாறுபடாமலும் சமயச் சார்பான அறங்கள், மற்ற உதவிப் பணிகளைப் புறக்கணிக்காமலும் கையிருப்பில் உள்ள சேமிப்புப் பணத்தில் நாலரை லட்சம் ரூபாய் நீங்கலாக எஞ்சிய தொகையைக் கொண்டு தமிழ்நாட்டில் குறிப்பாகச் சென்னை நகரில் கல்விக் கூடங்களுக்குப் பயன்படுத்த வழி ஏற்படுத்தியது. இதற்கான அறக்கட்டளை இயக்கமும் கட்டுப்பாடும் வருவாய்த் துறையின் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டது. இதன்பின் உச்சநீதிமன்றத்தின் ஆலோசனைப்படி எல்பின்ஸ்டன் அரசு விதித்த விதிமுறைகளுக்கேற்ப, பச்சையப்பன் அறக்கட்டளை கள் அனைத்தையும் நிர்வகிக்கவும், வள்ளலின் அறங்களைச் செவ்வனே செயல்படுத்தவும் இந்து சமயத்தைச் சேர்ந்த ஒன்பது அறங்காவலர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு பச்சையப்பரின் எண்ணம் இடையராது நிறைவேறத் தன்னாலான முயற்சியை மேற்கொண்டது.

இதைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படும் அறங்காவல் குழுவினரால் அறக் கட்டளைப் பணிகள் சீராக நடைபெற்று வருகின்றன.

வாழ்க பச்சையப்பர் அறம்!

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

# அன்னை செல்லம்மாள் வரலாறு

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றது நிற்பதொன் றில்.

(அதிகாரம் - புகழ், குறள் - 233)

இவ்வுலகில் அழிவில்லாமல் நிலைத்து விளங்குவது உயர்ந்த புகழைத் தவிர வேறொன்றுமில்லை என்ற இக்குறள் நெறிக்கு உதாரணமாக வாழ்ந்து கல்விக் கொடையும் ஆன்மிகக் கொடையும் கொடுத்து நிலைத்த புகழைப் பெற்றவர் திருமயிலை அன்னை செல்லம்மாள் அவர்கள்.

**அன்னை செல்லம்மாள் வாழ்க்கை (1867-1917)**

அன்னை செல்லம்மாள் அவர்கள் திருப்போரூர் அருகில் பட்டிப்பாளையம் என்ற கிராமத்தில் முனுசாமி கிராமணியார், பாலாம்மாள் தம்பதியருக்கு 1867-ஆம் ஆண்டு மகளாகப் பிறந்தார். செல்லம்மாள் சிறிய வயதிலேயே குடும்பப் பொறுப்புடனும் ஆன்மிக உணர்வுடனும் வளர்ந்து வந்தார். செல்லம்மாள் பருவ வயதை அடைந்தவுடன் பெற்றோர் திருக்கழுக்குன்றத்தில் இருந்த வடமலை கிராமணியார் என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர்.

வடமலை கிராமணியார் தன்னுடைய நிலங்களில் மிகுதியாக இருந்த பனைமரங்கள், தென்னை மரங்கள் மூலமாக பால் எடுத்து பதநீராக்கி விற்கும் தொழிலைச் செய்து வந்துள்ளார். செல்லம்மாளைத் திருமணம் செய்த பிறகு அவர் செய்த தொழிலில் மிகப்பெரிய உயர்வு ஏற்பட்டு பெரிய செல்வந்தராக மாறியுள்ளார். இவருடைய இல்லற வாழ்வு இன்பமாகச் சென்றது. ஆனால் குழந்தைச் செல்வம் இல்லாமல் இருந்தது. இச்சூழலில் தான் வடமலை கிராமணியார் அவர்கள் 1911-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 31-ஆம் தேதி இயற்கை எய்தினார்.குழந்தைப் பேறும் இல்லை, தன் அன்புக் கணவரும் தன்னை விட்டுப் பிரிந்த நிலையில் செல்லம்மாள் பெருந்துயருக்கு ஆளானார். இக்கட்டான இச்சூழலில் அன்னை

செல்லம்மாள் மனம் தளராமல், இனிமேல் தான் வாழும் காலத்தை மற்றவர்களுக்குப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டும்என்றமனவுறுதிபூண்டார்.இதனைச்செயல்படுத்தும் விதமாக தன் சொத்துக்களைப்பற்றிய முழுவிபரத்தைச் சேகரிக்கத் தொடங்கினார். இச்சொத்துக்களைக் கொண்டு எத்தகைய நற்காரியங்களைச் செய்யலாம் என ஆலோசித்து வந்தார்.

செல்லம்மாள் தானும் தன்னுடைய கணவரும் சேர்ந்து வாங்கிய சொத்துக்களை எல்லாம் 1911-ஆம் ஆண்டு முதல் 1912-ஆம் ஆண்டு வரை முழுவிபரத்தையும் சேகரித்தார். 1913-ஆம் ஆண்டு பிப்ரவரி 10-ஆம் நாள் செல்லம்மாள் தன்னுடைய சொத்துக்களை எல்லாம் தர்மகாரியங்கள் செய்வதற்காக டிக்ளரேஷன் ஆப் டிரஸ்டு என்ற நிறுவனத்துக்குத் தானமாக பத்திரம் எழுதிக் கொடுத்தார். அதில் சில திருத்தங்கள் தேவைப்பட்டதால், அதே வருடம் அக்டோபர் மாதம் 31-ஆம் நாள் மீண்டும் அதைத் திருத்தி இன்னொரு பத்திரம் எழுதிக் கொடுத்தார். டிக்ளரேஷன் ஆப் டிரஸ்ட்டுக்கு தன் சொத்துக்களை எல்லாம் தானமாகக் கொடுத்தும், அதன் மூலமாக எந்தவிதமான செயல்பாடுகளும் நடைமுறைக்கு வராததால், அந்த நிறுவனத்தில் இருந்து வெளியில் வந்தார். அதன் பிறகு அன்றைய காலக்கட்டத்தில் நம்பிக்கையுடன் நல்லறம் செய்து வந்த பச்சையப்பன் அறக்கட்டளையைத் தேர்ந்தெடுத்து தன்னுடைய சொத்துக்களையெல்லாம் 1913-ஆம் ஆண்டு நவம்பர் 10-ஆம் நாள் உயிலாக எழுதிக் கொடுத்தார். இதை எழுதிக் கொடுத்த போது செல்லம்மாள் அவர்கள் திருவல்லிக்கேணியை அடுத்த திருவட்டீஸ்வரன்பேட்டையில் அவரது வீட்டில் வசித்து வந்தார்.

செல்லம்மாள் உயிலாக எழுதிக் கொடுத்த 1913-ஆம் ஆண்டு என்பது உலகப்போர் ஏற்படக்கூடிய பதற்றமான சூழல் நிலவிய காலக்கட்டம் ஆகும். 1914 -இல் இருந்து 1918 ஆம் ஆண்டு வரை முதல் உலகப் போர் நடைபெற்றது.

இப்பதட்டமான சூழலில் பெரும்பான்மையான மக்கள் தங்கள் சொத்துக்களை எல்லாம் விற்றுவிட்டுத் தன் சொந்த ஊருக்குப் பயந்து சென்ற காலமாகும். யாருமே நிம்மதியாக வாழாமல் ஒரு பயத்துடன் பதட்டத்துடன் வாழ்ந்த இந்தக் காலக்கட்டத்தில்தான் செல்லம்மாள் அவர்கள் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு உயர்ந்த நோக்கத்தோடு தன் சொத்துக்களை எல்லாம் கல்விக்காகவும், ஆன்மிகத்திற்காகவும் தானமாகக் கொடுத்துள்ளார்கள்.

**செல்லம்மாளின் கல்விக் கொடை**

பச்சையப்பன் அறக்கட்டளைக்கு எழுதிக் கொடுத்த உயிலில் செல்லம்மாள் அவர்கள், அன்றைய காலக்கட்டத்தில் வெளியூர்களில், கிராமப்புறங்களில் இருந்து வந்து சென்னைப் பெருநகரத்தில் தங்கியிருந்து படித்த மாணவர்கள் மிகவும் சிரமத்தைச் சந்தித்து வந்தனர். அவர்களின் இன்னலைப் போக்க, பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளிகள், பச்சையப்பன் கல்லூரிகளில் படிக்கக் கூடிய சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கக் கூடிய மாணவர்களுக்கு உணவு, உடை, அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், கட்டணம், விடுதி வசதி போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, இந்த சொத்துக்களை எல்லாம் பயன்படுத்த வேண்டும் என்று, இன்று சென்னை செல்லம்மாள் கல்லூரி இருக்கக் கூடிய இடத்தில் ஐந்து காணி(ஒரு காணி - ஒன்றரை ஏக்கர்) நிலத்தைக் கொடுத்தார்கள். செல்லம்மாளின் கல்விக்கொடையில் அடுத்த மிகப்பெரிய பங்களிப்பாக, பச்சையப்பன் கல்லூரி விடுதியில், செல்லம்மாள் நிதியிலிருந்து தொல்காப்பியர் இல்லத்தில் தரைத்தளம், முதல்தளம், இரண்டாம்தளம் என ஒவ்வொரு தளத்திலும் பத்து அறைகளாக முப்பது அறைகள் கட்டப்பட்டது. இது 1914 -ஆம் ஆண்டு திறக்கப்பட்டதாக ஜான் பரோன் பென்ட்லேண்ட் லித் என்பவர் கல்வெட்டு நிறுவியுள்ளார். இவ்விடுதி நிறுவப்பட்டு நூறாண்டுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து 2014 -ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. நூற்றாண்டைக்

கடந்து நிற்கும் இவ்விடுதியில் இன்றும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தங்கி படித்து பயன்பெற்று வருகின்றனர். பழமையான இவ்விடுதி புதுப்பிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் 14.08.2025 -ஆம் ஆண்டு அறக்கட்டளை நிர்வாகி நீதியரசர் திரு. வ. பார்த்திபன் தலைமையில், பச்சையப்பன் அறக்கட்டளை செயலர் திரு. சி. துரைக் கண்ணு, பச்சையப்பன் கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.

அன்னை செல்லம்மாள் அவர்கள் கல்விக்காக மட்டுமன்றி, தன்னிடம் மீதமிருந்த சொத்துக்களில் பெரும்பகுதியை ஆன்மிகப் பணிக்காகவும், அறப்பணிக்காகவும் தானமாகக் கொடுத்தார்கள்.

**செல்லம்மாளின் ஆன்மிகக் கொடையும் அறக்கொடையும்**

செல்லம்மாள் அம்மா அவர்கள் ஆன்மிகத்திற்காக கொடை கொடுத்த தலங்கள் என்று பார்க்கும் போது, திருக்கழுக்குன்றம் தாழக்கோவில் வேதாசலசுவாமி கோவில், மேலைக்கோயில் வேதகிரிசுவரர் கோவில், திருப்போரூர் கந்தசுவாமி கோவில், திருவட்டீசுவரன்பேட்டை திருவட்டீசுவரர் கோவில், திவட்டீசுவரன்பேட்டை பிள்ளையார்கோவில், செல்வப் பிள்ளையார் கோவில், மைலாப்பூர் வேலாத்தம்மன் கோவில், கோமளீசுவரன்பேட்டை கோமாளீசுவரர் கோயில் போன்ற ஆலயங்களுக்கு தினப்படி பூசை மற்றும் அக்கோயிலில் திருவிழாக்கள் நடத்தவும் தன் சொத்துக்களைப் பயன்படுத்தும்படி எழுதி வைத்தார்கள். அதோடு வறியவர்களின் பசி போக்கவும் ஈரமனதுடன் உயிலை எழுதச் செய்துள்ளார்கள். அதன்படி, பரதேசிகள், வடநாட்டிலிருந்து வந்த சந்நியாசிகள், வழிப்போக்கர்கள் என இவர்களுக்கெல்லாம் நாள்தோறும் விருந்து கொடுக்க வேண்டும் என்று எழுதியுள்ளார்.

இவ்வாறெல்லாம் உயிலை எழுதி வைத்த செல்லம்மாள் பிற்காலத்தில் என்றேனும் இதில் எந்த பிரச்சினைகளும் வந்து

விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்துள்ளார்கள். 1913-ஆம் ஆண்டு உயில் எழுதுகிறார்கள்; அது நடைமுறையில் வருகிறது; அப்படி வரும் போது சில சிக்கல்கள் இருந்திருக்க வேண்டும். எனவே, மறுபடியும் அந்த உயிலைத் திருத்தம் செய்து 1915 -ஆம் ஆண்டு மீண்டும் எழுதுகிறார்கள்; திரும்பவும் அந்த உயிலை நடைமுறைப்படுத்தும் போது சிக்கல் வர, 1916-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தற்போது இருக்கக் கூடிய நடைமுறைப்படுத்தப்பட்ட உயிலை எழுதி இருக்கிறார்கள். எழுதிய உயிலில் பிற்காலத்தில் எந்த சிக்கலும் வரக்கூடாது என்பதால்தான் அம்மா செல்லம்மாள் அவர்கள் திரும்பத்திரும்ப ஆராய்ந்து சட்ட அறிவுடன் பல மாற்றங்களைச் செய்து திருத்திச் செம்மைப்படுத்தியுள்ளார்கள்.

அன்றைய காலகட்டத்தில் பள்ளிக்கூடம் போகாத படிக்காத ஒரு பெண்ணாக செல்லம்மாள் இருந்தாலும், படித்தவர்கள் கூட இத்தகைய தொலைநோக்குப் பார்வையோடு செயல்பட்டிருக்க முடியாது, இத்தகைய தைரியமும்,ஈகையும்,ஈரமும், கொடைப் பண்பும் கொண்ட திருமயிலை அன்னை செல்லம்மாள் அவர்கள் 1917 -ஆம் ஆண்டு மே மாதம் 21 -ஆம் நாள் தனது ஐம்பதாவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்.

## செல்லம்மாள் மகளிர் கல்லூரி வரலாறு

செல்லம்மாள் அம்மா மறைந்தாலும் அவரது விருப்பத்தை நிறைவேற்றஐந்துகாணிநிலத்தில்முதலில்பயிற்சியாளர்விடுதி, 24.03.1959 ஆம் ஆண்டு அன்றைய மெட்ராஸ் மேயர் திரு.ஸ்ரீ. கே.கமலகண்ணன் அவர்கள், பச்சையப்பன் அறக்கட்டளைத் தலைவர்.டி.சண்முகம் மற்றும் அறங்காவலர்கள் முன்னிலையில் திறந்து வைக்க தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னால் பச்சையப்பன் அறக்கட்டளை அறங்காவல் குழுவினரால் மகளிர் கல்லூரி ஒன்றை சென்னையில் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றிய போது, ஏழை மாணவ மாணவிகளுக்காக தொடங்கப்பட்ட விடுதியே பின்னாளில்

கல்லூரி வகுப்பறையாக மாறியது. 1971-ஆம் ஆண்டு ஏப்ரலில் கல்வி அமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்று பச்சையப்பர் பெயரால் 1971-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 22-ஆம் நாள் கல்லூரி தொடங்கப்பெற்றது. மறுவருடம் அறக்கட்டளைத் தலைவர் திரு. டி.கே. கபாலி ஐயாவின் வேண்டுகோளுக்கு இணங்க கல்லூரியின் பெயர் செல்லம்மாள் என மாற்றப்பட்டு, செல்லம்மாள் மகளிர் கல்லூரியாகச் செயல்படத் தொடங்கியது. முதன்முதலில் இளங்கலைப் பிரிவில் புதுமுக படிப்புகளுக்கு மட்டுமே சென்னைப் பல்கலைக்கழகம் அனுமதி வழங்கியது.

1972 -ஆம் ஆண்டு இளங்கலை பட்ட படிப்பு தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. முதலாவதாக இளங்கலைப் பிரிவில் தமிழ் இலக்கியம் தொடங்கப் பெற்றது. பின்னர் பொருளாதாரமும், ஆங்கில இலக்கியமும், அறிவியல் பிரிவில் விலங்கியலும், 1976 -ஆம் ஆண்டுக்குள் அடுத்தடுத்துத் தொடங்கப் பெற்றன. 1976 -ஆம் ஆண்டு வேதியியலும், முதுகலை பிரிவில் தமிழும் தொடங்கப்பெற்றன. 1982 -ஆம் ஆண்டில் வணிகவியல் பட்டப் படிப்பும் தொடங்கப்பெற்றது.2000-ஆம் ஆண்டு தமிழியலில் ஆய்வியல் நிறைஞர் பட்ட படிப்பு தொடங்கப்பட்டது. 2004 -ஆம் ஆண்டு பகுதி நேர முனைவர் பட்ட படிப்பும், முழு நேர முனைவர் பட்ட படிப்பும் தொடங்கப் பெற்றன.

பொருளியல் மற்றும் வணிகவியல் துறையில் முழு நேர முனைவர் பட்ட படிப்பிலும், ஆங்கிலத் துறையில் பகுதி நேர முனைவர் பட்ட படிப்பிலும் மாணவிகள் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர். விலங்கியல் பட்டப் படிப்பு பிரிவு 2010-ஆம் ஆண்டு முதல் சிறப்பு விலங்கியல் மற்றும் உயிர்த்தொழில் நுட்பவியல் துறையாகச் செயல்பட்டுக் கொண்டுள்ளது. சுழற்சி ஒன்று கல்லூரியில் 1300 மாணவிகள் படித்து வருகின்றனர்.

கல்லூரி வளர்ச்சியின் அடுத்த கட்டமாக மாணவியர் பலரின் வேண்டுகோளுக்கு ஏற்ப 1984-ஆம் ஆண்டு சுழற்சி

இரண்டு கல்லூரி தொடங்கப்பட்டது. 65 மாணவிகளை மட்டுமே கொண்டு வணிகவியல் இளங்லைப் பட்டப் படிப்புத் தொடங்கப்பட்ட நிலையில், தற்போது தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை, வணிக நிர்வாகத்துறை, நிறுமச் செயலாண்மைத்துறை, கணிதவியல் துறை, கணக்கு பதிவியல் மற்றும் நிதியியல்துறை, கணிப்பொறியியல்துறை, என விரிந்து சீர்மையுடன் 1300 மாணவிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இங்கு பயிலும் மாணவிகள் தாங்கள் படிப்பதை செயல்முறைப் பயிற்சி மூலம் அறிய ஆய்வகங்கள் செயல்படுகின்றன. இயற்பியல் துறைக்கான ஆய்வகம் (Lab), வேதியியல் துறைக்கான ஆய்வகம், உயிரியல் துறைக்கான ஆய்வகம், தாவரவியல் துறைக்கான ஆய்வகம், இவற்றுடன் கணிப்பொறியியலுக்கான ஆய்வகமும், இவை ஒவ்வொன்றும் அதற்கான அலுவலர்களைக் கொண்டு சிறப்புடன் இயங்கி வருகின்றன.

கல்லூரி நான்கு கட்டிடத் தொகுதிகளாகப் (Block) பிரிக்கப்பட்டுள்ளது. 1.வடமலை கட்டிடத் தொகுதி. 2.முனுசாமி கட்டிடத் தொகுதி 3.பாலாம்பாள் கட்டிடத் தொகுதி 4. பச்சையப்பர் கட்டிடத் தொகுதி. இந்நான்கு கட்டிடத் தொகுதிகளில் மொத்தம் 27 வகுப்பறைகள் சிறப்புடன் செயல்பட்டுக் கொண்டுள்ளன. கல்லூரியின் நுழைவு வாயிலில் சிறிய வித்யா கணபதி ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் தினப்படி பூசையும், சிறப்புப் பூசைகளும் நடத்தப்படுகின்றன. இது 1999 -ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

வித்யா கணபதி ஆலயத்தை ஒட்டி பெரிய கூடைப்பந்தாட்ட ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது. இது 2018 -ஆம் ஆண்டு அறக்கட்டளைத் தலைவர் திரு. ஜெயச்சந்திரன் மற்றும் 9 அறங்காவலர்கள், கல்லூரி முதல்வர் முனைவர் (திருமதி.) வி.க. விஜயலட்சுமி முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. அதில் விளையாட்டுப் பயிற்சிகளும்,

போட்டிகளும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. கல்லூரியின் பின்புறம் மிகப்பெரிய திறந்தவெளி ஆடுகளம் உள்ளது. பெரிய அளவில் போட்டிகள் நடத்தப்படும் போது அங்கு விளையாட்டுகள் நடத்தப்படுகிறது.

பெருந்தகை செல்லம்மாள் அம்மாவின் திருவுருச் சிலையானது வடமலை கட்டிடத்தில் 13.3.2003-ஆம் ஆண்டு கல்லூரி முதல்வர் முனைவர் (திருமதி).பிரேமா பிரபாகரன் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. அம்மாவின் வெண்கலச் சிலையானது செல்லம்மாள் கலையரங்கம் முகப்பில் கல்லூரி முதல்வர், முனைவர் ரெ. வள்ளி, ஆசிரியப் பெருமக்கள் மற்றும் மாணவியர்களால் 2011-2012 கல்வியாண்டில் துவங்கப்பட்டு 10.04.2013 -ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

செல்லம்மாள் மகளிர் கல்லூரியில் படிக்கும் பெண் பிள்ளைகள் விளையாட்டில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கத்தில் உடற்கல்வி ஆசிரியர் நியமிக்கப்பட்டு, அவருக்கு உதவியாகப் பயிற்சியாளர்களும் சேர்ந்து, இவர்களின் மேற்பார்வையில் கபடி, கூடைப்பந்து. கால்பந்து, ஓட்டப்பந்தயம், கோ கோ,ஈட்டி எறிதல், வட்டு எறிதல் போன்ற விளையாட்டுக்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவ்விளையாட்டுக்களில் பயிற்சி பெற்ற மாணவிகள், கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகள், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகள், மாநில அளவிலான போட்டிகளில் பங்கு கொண்டு பரிசுகளைப் பெற்று வருகின்றனர். நாட்டுப்புற விளையாட்டாகிய சிலம்பாட்டம், நாட்டுபுற இசையாகிய பறையும், பயிற்சியாளர்களால் காலையும் மாலையும் பயிற்சியளிக்கப்படுகிறது. இதில் பயிற்சி பெற்ற மாணவிகள் மாநிலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பல நாட்டுப்புற நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு கலையை வளர்த்து வருகின்றனர்.

சுழற்சி ஒன்று மற்றும் சுழற்சி இரண்டு கல்லூரியில் ஆசிரியப்பணி எனும் அறப்பணியை ஏற்று,கல்வித் தகுதியும்,

தனித்திறனும் கொண்ட நூறுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் இக்கல்வி நிலையத்தில் தொண்டாற்றுகின்றனர். ஆசிரியரல்லாத அலுவலகப் பணியாளர்களாக இருபத்து ஐந்திற்கும் மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர்.

கல்லூரியின் விரிவாக்கப் பணிகள் மிகச்சிறப்பாக தொடங்கப்பட்ட ஆண்டு முதல் இன்றைய நாள் வரை, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கல்லூரியில் புதுமுக வகுப்புகள் தொடங்கப்பட்டதால் வடமலை கட்டிடத்தின் முதல் தளத்தில் 1986-ஆம் ஆண்டு திரு.செ.அரங்கநாயகம் மாண்புமிகு கல்வி அமைச்சா் அவா்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 1987-ஆம் ஆண்டு திரு.சி.பொன்னையன் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சா் அவா்கள் தலைமையில், திரு.எஸ்.காசிராஜன் அறங்காவல் தலைவா் அவா்கள், மற்றும் முனைவா் (திருமதி) இந்திரா சோமசுந்தரம் கல்லூரி முதல்வா் முன்னிலையில் கூடுதல் வகுப்பறைகளும், பொது நூலகமும் திறந்து வைக்கப்பட்டன.

கல்லூரியின் கலையரங்கம் கட்டும் பணிகள் தொடங்கப் பெற்று, திரு நாஞ்சில் ஆா்.கென்னடி அறங்காவல் குழு நிா்வாகி மற்றும் அறங்காவலா்கள், கல்லூரி முதல்வா் முனைவா் (திருமதி) எஸ்.ரமாராணி முன்னிலையில் 2005 -ஆம் ஆண்டு ஜனவரி 27 -ஆம் நாள் திறந்து வைக்கப்பட்டது. இதில் 1800 மாணவிகள் அமரக்கூடிய சிறப்பைப் பெற்றது. இக்கலையரங்கம் கல்லூரியின் முகப்பிலேயே அமைந்ததுள்ளது. வடமலை கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கிய பொது நூலகம் 2013 -ஆம் ஆண்டு முதல் கலையரங்கத்தின் முதல் மாடிக்கு மாற்றப்பட்டு, இன்று வரை மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நூலகம் இருபத்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அரிய நூல்களைக் கொண்டு மாணவியா் அறிவினை வளா்த்திடும் அரும் பணியினைச் செவ்வனே செய்து வருகின்றது.

தற்போது கல்லூரியின் விரிவாக்கப் பணிகளான வடமலை கட்டிடத்தின் முதல் தளத்தில் நவீன வசதிகளுடன்

கூடிய ஒரு கருத்தரங்கக் கூடம், ஐந்து கூடுதல் வகுப்பறைகள், செல்லம்மாள் திறந்தவெளிக் கலையரங்கம் மற்றும் உணவுக்கூடம் கட்டப்பட்டு பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகி மாண்புமிகு நீதியரசர் திரு. வா. பார்த்திபன் அவர்கள் தலைமையில், பச்சையப்பன் அறக்கட்டளைச் செயலாளர் திரு. சி. துரைக்கண்ணு அவர்கள் மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் (திருமதி) வே. மலர்விழி முன்னிலையில் 14.07.2024 மற்றும் 27.07.2024 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

செல்லம்மாள் அரங்கம் புதுப்பிக்கப்பட்டு 16.09.2024 ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகி திரு. வ. பார்த்திபன் அவர்கள் தலைமையில் பச்சையப்பன் அறக்கட்டளைச் செயலாளர் திரு. சி. துரைக்கண்ணு அவ்ரகள் மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி. வே. மலர்விழி முன்னிலையில் மிகச் சிறப்பான முறையில் திறந்து வைக்கப்பட்டது.

ஆல்போல் தழைத்து வரும் செல்லம்மாள் மகளிர் கல்லூரி, பல்லாயிரம் பெண் குழந்தைகளின் அறிவை வளர்த்து கொண்டிருக்கும், செல்லம்மாள் மகளிர் கல்லூரியை பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வகித்து வரும் நிலையில், அறக்கட்டளையை இந்து சமயத்தைச் சார்ந்த ஒன்பது அறங்காவலர்கள் அடங்கிய குழு ஒன்று ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு செல்லம்மாள் அவர்களின் அறங்களைச் செயலாற்றி வருகின்றனர்.

மாநகரின் நுழைவு வாயில் பகுதியில் அமைந்துள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரி, அதனைச் சுற்றியுள்ள பெண்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் சிறந்த கல்லூரியாக தனிச்சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. அன்னை செல்லம்மாள் அவர்கள் கல்விக்காக அளித்த பெருங்கொடை, எத்தனையோ பெண் பிள்ளைகளின் வாழ்வை உயர்வடையச் செய்துள்ளது. செல்லம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள் ஒவ்வொருவரின் உயர்விலும் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய அன்னை செல்லம்மாளின் புகழ் உலகம் இருக்கும் வரை நிலைத்து நிற்கும்.

## முதல்வர் தொடர் பட்டியல்

1. முனைவர். **இந்திரா சோமசுந்தரம்,** பி.எஸ்ஸி., பிடி., எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
முதல்வர் 01-06-1971 முதல் 10-10-1979 வரை

2. முனைவர். **பத்மினி தேவி கிருஷ்ணன்,** எம்.எஸ்ஸி., பிஎச்.டி.
முதல்வர் (பொறுப்பு) 11-10-1979 முதல் 04-01-1981 வரை

3. திருமதி. **மும்தாஜ் பாலகிருஷ்ணன்,** பி.ஏ. (ஆனர்ஸ்) எம்.ஏ.
முதல்வர் 05-01-1981 முதல் 31-03-1982 வரை

4. முனைவர். **இந்திரா சோமசுந்தரம்,** பி.எஸ்ஸி., பிடி., எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
முதல்வர் 01-04-1982 முதல் 09-07-1982 வரை

5. முனைவர். **பத்மினி தேவி கிருஷ்ணன்,** எம்.எஸ்ஸி., பிஎச்.டி.
முதல்வர் (பொறுப்பு) 10-07-1982 முதல் 30-01-1983 வரை

6. முனைவர். **இந்திரா சோமசுந்தரம்,** பி.எஸ்ஸி., பிடி., எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
முதல்வர் 31-01-1983 முதல் 11-06-1983 வரை

7. திருமதி. **பமீலா சாமுவேல்,** எம்.ஏ., எம்பிஃல்.
முதல்வர் (பொறுப்பு) 12-06-1983 முதல் 03-07-1983 வரை

8. முனைவர். **இந்திரா சோமசுந்தரம்,** பி.எஸ்ஸி., பிடி., எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
முதல்வர் 04-07-1983 முதல் 31-05-1990 வரை

9. திருமதி. **பமீலா சாமுவேல்,** எம்.ஏ., எம்பிஃல்.
முதல்வர் (பொறுப்பு) 01-06-1990 முதல் 04-01-1991 வரை

10. திருமதி. **இந்திரா ரங்கநாதன்**, எம்.ஏ., பி.எல்., எம்.பிஃல்.
முதல்வர் 05-01-1991 முதல் 31-05-1995 வரை

11. திருமதி. **மும்தாஜ் பாலகிருஷ்ணன்,** பி.ஏ.(ஆனர்ஸ்) எம்.ஏ.
முதல்வர் 31-05-1991 முதல் 31-05-1995 வரை

12. திருமதி. **பமீலா சாமுவேல்,** எம்.ஏ., எம்.பிஃல்.ஏ.
முதல்வர் 01-06-1995 முதல் 31-05-1999 வரை

13. திருமதி. **லீலா பழனியப்பன்,** எம்.ஏ.
முதல்வர் (பொறுப்பு) 01-06-1999 முதல் 28-10-1999 வரை

14. முனைவர். **வெ.பிரேமா பிரபாகரன்,** எம்.எஸ்ஸி., பிஎச்.டி.
முதல்வர் 29-10-1999 முதல் 31-05-2003 வரை

15. முனைவர். **பா.புவனேசுவரி,** எம்.ஏ.,எம்.பிஃல்., பிஎச்.டி., டி.எச்.டி.
முதல்வர் (பொறுப்பு) 01-06-2003 முதல் 21-10-2003 வரை

16. முனைவர். **ச.ரமாராணி,** எம்.எஸ்ஸி., எம்.பிஃல்., பிஎச்.டி.
முதல்வர் 22-10-2003 முதல் 06-10-2008 வரை

17. முனைவர். **வே.இளவரசி,** எம்.ஏ., எம்.பிஃல்., பிஎச்.டி., சி.ஏ.
முதல்வர் (பொறுப்பு) 07-10-2008 முதல் 09-10-2008 வரை

18. முனைவர். **ரெ.வள்ளி,** எம்.எஸ்ஸி., பிஎச்.டி.
முதல்வர் 10-10-2008 முதல் 26-08-2009 வரை

19. முனைவர். **ச.ரமாராணி,** எம்.எஸ்ஸி., எம்.பிஃல்., பிஎச்.டி.
முதல்வர் 27-08-2009 முதல் 31-05-2010 வரை

20. திருமதி. **இர. கயற்கன்னி,** எம்.ஏ., எம்.பிஃல்.
முதல்வர் (பொறுப்பு) 01-06-2010 முதல் 16-09-2010 வரை

21. முனைவர். **ரெ.வள்ளி,** எம்.எஸ்ஸி., பிஎச்.டி.
முதல்வர் 16-10-2010 முதல் 31-05-2013 வரை

22. முனைவர். **வெ.கலைவாணி,** எம்.காம்., எம்.பிஃல்., பிஎச்.டி.
முதல்வர் (பொறுப்பு) 01-06-2013 முதல் 18-01-2014 வரை

23. முனைவர். **இரா.சுபலஷ்மி,** எம்.ஏ., எம்.பிஃல்., பிஎச்.டி.
முதல்வர் (கூடுதல் பொறுப்பு) 18-01-2014 முதல் 23-07-2014 வரை

24. முனைவர். **வி.க.விஜயலட்சுமி,** எம்.காம்., எம்.பிஃல்., பிஎச்.டி.
முதல்வர் 23-07-2014 முதல் 31-05-2018 வரை

25. முனைவர். **வெ.கலைவாணி,** எம்.காம்., எம்.பிஃல்., எம்.பிஏ., பிஎச்.டி.
முதல்வர் (பொறுப்பு) 01-06-2018 முதல் 08-06-2018 வரை

26. முனைவர். **வெ.கலைவாணி,** எம்.காம்., எம்.பிஃல்., எம்.பிஏ., பிஎச்.டி.
முதல்வர் 09-06-2018 முதல் 26-04-2019 வரை

27. முனைவர். **வெ.கலைவாணி,** எம்.காம்., எம்.பிஃல்., எம்.பிஏ.,பிஎச்.டி.
முதல்வர் (பொறுப்பு) 27-4-2019 முதல் 29-05-2020 வரை

28. முனைவர். **ஸ்ரீமதி ராமலிங்கம்,** எம்.காம்., எம்.ஃபில்., எம்.பிஏ., பிஎச்.டி.
முதல்வர் (கூடுதல் பொறுப்பு) 29-05-2020 முதல் 01.04.2021 வரை

29. முனைவர். **ஜீ.பிரேமசுந்தரி,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.
முதல்வர் (பொறுப்பு) 01-04-2021 முதல் 31-05-2022 வரை

30. முனைவர். **வீ.மகாலட்சுமி நட்சத்திரம்,** எம்.காம்.,பி.எட்., எம்.பிஃல்., பிஎச்.டி.
முதல்வர் (பொறுப்பு) 31-05-2022 முதல் 14-09-2023 வரை

31. முனைவர். **வே.மலர்விழி,** எம்.எஸ்ஸி., எம்.பிஃல்., பிஎச்.டி.
முதல்வர் 14-09-2023 முதல்

## கல்லூரி ஆட்சிக்குழு

1. முனைவர். **வே.மலர்விழி,** எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., பிஎச்.டி.
முதல்வர்

2. முனைவர். **வீ.மகாலட்சுமி நட்சத்திரம்,**
எம்.காம்., பிஎட்., எம்.ஃபில்., பிஎச்.டி.

3. முனைவர். **வீ. கவிதா,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.

4. திரு. **சி. தணிகைவேல்,** பி.காம்., டி.கோப்
கண்காணிப்பாளர்

5. முனைவர். **எஸ்.தேன்மொழி,** எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., பிஎச்.டி.
(பல்கலைக்கழகம் தேர்வு செய்யும் உறுப்பினர்)
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
உளவியல் ஆலோசனைத் துறை

## கல்லூரி ஆலோசனைக் குழு

1. முனைவர். **வே. மலர்விழி,** எம்.எஸ்ஸி., எம்ஃபில்., பிஎச்.டி.
   முதல்வர் மற்றும் துறைத் தலைவர் இயற்பியல் துறை
2. முனைவர். **வீ. மகாலட்சுமி நட்சத்திரம்,**
   எம்.காம்., பிஎட்., எம்ஃபில்., பிஎச்.டி.
3. முனைவர். **வீ. கவிதா,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
4. முனைவர். **கா.அன்பரசி,**
   எம்.எஸ்ஸி., எம்ஃபில்., (க)எம்ஃபில்., (க.பொ)
   பி.ஜி.டி.சி.ஏ., பி.ஜி.டி.சி.எம்., பிஎச்.டி.
6. முனைவர். **மு.ச.சுமதி,** எம்.ஏ., (பொருளியல்).,
   எம்.ஏ.(ஆங்கிலம்),எம்ஃபில்., பிஎச்.டி.
7. முனைவர். **ப.விமலா,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
8. முனைவர். **ம.சித்ரா,** எம்.எஸ்ஸி., எம்ஃபில்., பிஎச்.டி.
9. முனைவர். **சு. செந்தில் குமாரி,**
   எம்.எஸ்ஸி., எம்ஃபில்., எ.டபிள்யூ.சி., பிஎச்.டி.
10. முனைவர். **கு.லட்சுமிசாய்,**
    எம்.எஸ்ஸி., பி.எட்., எம்ஃபில்., பிஎச்.டி.
11. முனைவர். **மு.ஆ.ப சரஸ்வதி,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
12. முனைவர். **தே. மணிமேகலை,**
    எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்., எம்ஃபில்., பிஎச்.டி.,
    பி.ஜி.டி.எல்.ஏ.என்.
13. முனைவர். **கு. சித்ரா தேவி,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
14. முனைவர். **ச. நெல்லை காந்திமதி,**
    எம்.பி.எட்., எம்ஃபில்., பிஎச்.டி.

## கல்லூரி நிர்வாக இயக்கம்

செல்லம்மாள் மகளிர் கல்லூரி, பச்சையப்பன் அறக்கட்டளையின் பொதுவான கட்டுப்பாட்டின் கீழ், கல்லூரி ஆலோசனைக் குழுவின் உதவியுடன் கல்லூரி முதல்வரைச் சார்ந்து இயங்குகின்றது.

**கல்லூரி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்:**

1. அறங்காவல் குழு உறுப்பினருள் ஒருவர்
2. செல்லம்மாள் கல்லூரி முதல்வர்
3. கல்லூரியின் அனைத்து துறைத்தலைவர்கள்
4. ஏனைய பேராசியர்களினின்றும் ஒருவர்

**கல்லூரி ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்கு உரியவை:**

1. கல்வி - பாடப் பிரிவுத் திட்டம்
2. தேர்வுகளை நடத்துதல்
3. பரிசுகள், உதவித் தொகை வழங்குதல்
4. நூலகப் புத்தகங்கள், ஆய்வுக்கூடக் கருவிகள் வாங்குதல்
5. கல்லூரி ஆண்டு விழாவும் விளையாட்டு விழாவும் நடத்துதல்

## சுழற்சி - I

## பேராசிரியர்கள் பெயர்ப்பட்டியல்

1. முனைவர். **வே. மலர்விழி,** எம்.எஸ்ஸி., எம்ஃபில்., பிஎச்.டி.
   முதல்வர் இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
   இயற்பியல் துறை

## முதுகலைத் தமிழியல் (ம) உயராய்வுத் துறை

1. முனைவர். **ப. விமலா,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
2. முனைவர். **செ. கனிமொழி,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்
3. முனைவர். **ப. தேன்மொழி,** எம்.ஏ.,
   எம்.ஏ. (மொழியியல்), எம்ஃபில்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்
4. முனைவர். **செ. ஹேமலதா,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்
5. முனைவர். **மா. ரமாதேவி,** எம்.ஏ., எம்.ஏ. (வரலாறு),
   எம்.ஏ. (மொழியியல்), எம்ஃபில்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்
6. முனைவர். **சீ. சியாமளா கௌரி,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்
7. முனைவர். **சு. சுசா,** எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்
8. முனைவர். **தா.அ. சிரிஷா,** எம்.ஏ., எம்.பிஃல்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்
9. முனைவர். **இரா. விமலாதேவி,** எம்.ஏ., எம்.பிஃல்., பி.எட்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

10. முனைவர். **கி. புவனேஸ்வரி,** எம்.ஏ., எம்.பிஃல்., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

11. முனைவர். **ச. யோகேஸ்வரி,** எம்.ஏ., எம்.பிஃல்., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

12. முனைவர். **சா.வனிதா,** எம்.ஏ., எம்.பிஃல்., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

13. முனைவர். **மோ.ரூபா,** எம்.ஏ., எம்.பிஃல்., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

## ஆங்கிலத்துறை

1. முனைவர். **வீ. கவிதா,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

2. முனைவர். **டி. இராஜகுமாரி,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

3. முனைவர். **பா. கார்குழலி,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

4. முனைவர். **ச.சியாமளாதேவி,** எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

5. முனைவர். **ம.மரியா ஃபெல்சி ராசாத்தி,** எம்.ஏ., எம்ஃபில்.,பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

6. முனைவர். **ஆ. இந்திரா பாலினி,**
எம்.ஏ., எம்.எஸ்.ஸி., (உளவியல்) எம்ஃபில்., பிஎச்.டி., பி.எட்.,
உதவிப் பேராசிரியர்

7. முனைவர். **ஜா. வேளாங்கன்னி சுமதி,**
எம்.ஏ., எம்.ஏ., (இதழியல்) எம்ஃபில்.,பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

8. முனைவர். **அபர்ணா அசோக்,** எம்.ஏ., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

## பொருளியல் துறை

1. முனைவர். **மு.ச. சுமதி,**
   எம்.ஏ.(பொருளியல்), எம்.ஏ.(ஆங்கிலம்), எம்.பிஃல்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

2. முனைவர். **கு. சித்ரா தேவி,** எம்.ஏ., எம்.பிஃல்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

3. முனைவர். **டி.சசிகலா,** எம்.ஏ.,எம்.ஏ.,(த)., எம்.பிஃல்.,
   எம்.எட்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

4. முனைவர். **இரா. சண்முகப்பிரியா,**
   எம்.ஏ.,எம்ஃபில்.,எம்.பி.ஏ.,பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

5. முனைவர். **தி. பானுமதி,**
   எம்.ஏ., எம்ஃபில்., எம்.பி.ஏ., பிஎச்.டி. டி.கோப்., பி.ஜி.டி.சி.ஏ.
   உதவிப் பேராசிரியர்

6. முனைவர். **ப. அஜந்தா,** எம்.ஏ., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

7. முனைவர். **த. சரளா,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

## வரலாற்றுத் துறை

1. முனைவர். **மு.ஆ.ப.சரஸ்வதி,** எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

## சிறப்பு விலங்கியல் மற்றும் உயிர்த்தொழில் நுட்பவியல் துறை

1. முனைவர். **சு.செந்தில் குமாரி,**
   எம்.எஸ்ஸி.,எம்.பிஃல்., எ.டபிள்யூ.சி.,பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

2. முனைவர். **ஆ.அன்பு செல்வி,** எம்.எஸ்ஸி.,பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

3. முனைவர். **ஆ.சுபாஷினி,** எம்.எஸ்ஸி.,பி.எட்.,எம்.பிஃல்.,பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

4. முனைவர். **ந. அமுதா,** எம்.எஸ்ஸி.,எம்ஃபில்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

## தாவரவியல் துறை

1. முனைவர். **கு. லட்சுமிசாய்,**
   எம்.எஸ்ஸி., பி.எட்., எம்.பிஃல்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

2. முனைவர். **ஸ். ஈவிலின் பிரியா,** எம்.எஸ்ஸி., எம்.பிஃல்., பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

## வேதியியல் துறை

1. முனைவர். **ம.சித்ரா,** எம்.எஸ்ஸி.,எம்.பிஃல்.,பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

2. முனைவர். **ச.ஆனந்த பிரியா,** எம்.எஸ்ஸி.,பிஎச்.டி.
   உதவிப் பேராசிரியர்

3. முனைவர். **ச.ரேவதி,** எம்.எஸ்ஸி.,பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

4. முனைவர். **கோ.விமலா,** எம்.எஸ்ஸி.,எம்.பிஃல்.,பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

5. திருமதி. **ஜ.ஆயிஷா சித்திக்கா,** எம்.எஸ்ஸி.
உதவிப் பேராசிரியர்

6. முனைவர். **க. அனுசுயாதேவி,** எம்.எஸ்ஸி., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

## கணிதவியல் துறை

1. முனைவர். **கா. அன்பரசி,** எம்.எஸ்ஸி., எம்ஃபில்., (க).,
எம்ஃபில்., (க.பொ.)., பி.ஜி.டி.சி.ஏ., பி.ஜி.டி.சி.எம்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

## இயற்பியல் துறை

1. நிரப்பப்பட வேண்டும்.

## வணிகவியல் துறை

1. முனைவர். **வீ. மகாலட்சுமி நட்சத்திரம்,**
எம்.காம்.,பிஎட்.,எம்ஃபில்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

2. முனைவர். **சே.ஜெயலஷ்மி,**
எம்.பி.ஏ.,எம்.காம்., எம்.ஃபில்.,பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

3. முனைவர். **தி.ஜெயஷீலா,**

எம்.காம்.,எம்.எட்., எம்.ஃபில்., எம்.பி.ஏ., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

4. முனைவர். **ப. மணிமொழி,**
எம்.காம்., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

5. முனைவர். **க. உமாதேவி,**
எம்.காம்., எம்.ஃபில்., எம்.பி.ஏ., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர்

## நூலகத் துறை

1. முனைவர். **தே.மணிமேகலை,**
எம்.ஏ.,எம்.எல். ஐ.எஸ்., எம்ஃபில்., பிஎச்.டி. பி.ஜி.டி.எல்.ஏ.என்.
நூலகர்

## உடற்கல்வித் துறை

1. முனைவர். **ச. நெல்லை காந்திமதி,** எம்.பி.எட்., எம்ஃபில்., பிஎச்.டி.

## அலுவலர்கள் பெயர்ப்பட்டியல்

| | |
|---|---|
| கண்காணிப்பாளர் | : 1. திரு. **சி. தணிகைவேல்,** எம்.காம்., டி.கோப். |
| மூத்த உதவியாளர் | : 1. திரு. **சி.பூ.குணசேகர்**<br>2. திருமதி. **வெ. சண்முகப்பிரியா,** பி.எஸ்ஸி.<br>3. நிரப்பப்பட வேண்டும் |
| இளநிலை உதவியாளர் | : 1. திருமதி. **சா.மைதிலி,** பி.ஏ.<br>2. செல்வி. **தா.ஐஷ்வர்யா,** எம்.இ.<br>3. திருமதி. **ஞா.குமுதா,** எம்.ஏ.,பி.எட்.<br>4. திரு. **கோ. சீனிவாசன்,** பி.டெக். |
| சுருக்கெழுத்து தட்டச்சர் | : 1. நிரப்பப்படவேண்டும் |
| தட்டச்சர் | : 1. திரு.**க.செங்கோட்டு வேலவன்,** பி.ஏ.<br>2. திருமதி. **க.முத்துலட்சுமி,** எம்.காம். |
| பண்டகக் காப்பாளர் | : 1. திருமதி. **ஏ.நர்மதா,** எம்.ஏ.,பி.எட்.,டி.பி.டி. |
| ஆய்வக உதவியாளர்கள் | : 1. திரு. **சு. தனசேகர்** (இயற்பியல் துறை)<br>2. திருமதி. **ச.மகாலட்சுமி,** டி.சி.சி.இ. (வேதியியல் துறை) |

3. திருமதி. **அ. பத்மாதேவி,** பி. பார்ம் (விலங்கியல் துறை)
4. திருமதி. **வெ.ரேவதி,** பி.ஏ., பி.எட். (விலங்கியல் துறை)
5. திரு. **வீ. ஆனந்தன்,** எம்.ஏ., பி.எட்., (வேதியியல் துறை)
6. நிரப்பப்படவேண்டும் (தாவரவியல் துறை)

பதிவறை எழுத்தர் : 1. திருமதி. **மு. மீனா**
2. நிரப்பப்படவேண்டும்
3. நிரப்பப்படவேண்டும்
4. நிரப்பப்படவேண்டும்

அலுவலக உதவியாளர்கள் : 1 – 4 வரை நிரப்பப்பட வேண்டும்

காவலர் : 1,2 நிரப்பப்பட வேண்டும்

நீர் கொணர்பவர் : 1 நிரப்பப்பட வேண்டும்

பெருக்குபவர் : 1 – 4 வரை நிரப்பப்பட வேண்டும்

குறியீட்டாளர் : 1 நிரப்பப்பட வேண்டும்

தோட்டக்காரர் : 1. திரு. மு. மனோகரன்

துப்புரவாளர் : 1. நிரப்பப்பட வேண்டும்

## சுழற்சி - I

1971-ஆம்ஆண்டுகாலைநேரக்கல்லூரிதொடங்கப்பட்டது. விடுதி மாணவியரைக் கொண்டு தொடங்கப்பட்டு, இன்று 1300 மாணவிகளைக் கொண்டு செயல்படுகிறது.

காலை வகுப்புகள் வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரையான 5 நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 02.00 மணி வரை நடைபெறும்.

### பாடப் பிரிவுகள்

இளங்கலை (பி.ஏ.)
இளம் அறிவியல் (பி.எஸ்ஸி.)
இளம் வணிகவியல் (பி.காம்.)
முதுகலை தமிழியல் (எம்.ஏ.)
முனைவர் பட்டம் (பிஎச்.டி.)

### பட்ட வகுப்புகள்

பகுதி - I தமிழ்
பகுதி - II ஆங்கிலம்
பகுதி - III -

### 1. இளங்கலை (பி.ஏ.)

அ. பிரிவு - (a) தமிழ்
ஆ. பிரிவு - (b) பொருளியல்
இ. பிரிவு - (c) ஆங்கிலம்

### 2. இளம் அறிவியல் (பி. எஸ்ஸி.)

அ. பிரிவு - சிறப்பு விலங்கியல் மற்றும் உயிர்த்தொழில் நுட்பவியல்
ஆ. பிரிவு - வேதியியல்

### 3. இளம் வணிகவியல் (பி. காம்.)

### 4. முதுகலை தமிழியல் (எம்.ஏ.)

### 5. ஆராய்ச்சிப் பட்டப் படிப்பு

அ. தமிழியல்
ஆ. வணிகவியல்
இ. ஆங்கிலம் (பகுதி நேரம்)

## கட்டண விதிமுறைகள்

அ. ஒரு வருடத்திற்கான பயிற்றுக் கட்டணம்

| | | |
|---|---|---|
| வகுப்பு | - | - |
| இளங்கலை | - | - |
| இளம் அறிவியல் | - | - |
| இளம் வணிகவியல் | - | - |
| முதுகலை தமிழியல் | - | 500 |
| முனைவர் பட்ட ஆய்வு | - | 8000 |

ஓர் ஆண்டுக்குரிய சிறப்புக் கட்டணத்தை அதற்குரிய பயிற்றுக் கட்டணத்துடன் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

கல்வியாண்டின் தொடக்கத்தில் எந்த வகுப்புக்கும் கட்டணத் தொகையை அதிகரிக்கும் உரிமை கல்லூரிக்கு உண்டு.

கீழே குறித்துள்ள கட்டணங்கள் அனைத்தும் பல்கலைக் கழகத்திற்குக் கல்லூரி வாயிலாகவே செலுத்தப்பட வேண்டும்.

| வ.எ. | விபரம் | UG | P.G. | M.Phil |
|---|---|---|---|---|
| 1 | பல்கலைக் கழக நுழைவு கட்டணம் | 200 | 200 | |
| 2. | பல்கலைக் கழக நுழைவு உரிமைக் கட்டணம் | 30 | 30 | |
| 3. | அங்கீகரிப்புக் கட்டணம் | 100 | | |
| 4 | பல்கலைக் கழக பதிவுக் கட்டணம் | 80 | 100 | 500 |
| 5. | நூலகக் கட்டணம் | 60 | 40 | 90 |
| 6. | உடற்பயிற்சி விளையாட்டுக் கட்டணம் | 60 | 40 | 90 |
| 7. | கலை பண்பாட்டு விழாக் கட்டணம் | 30 | 30 | 30 |
| 8. | உள்ளமைப்புகளின் மேம்பாட்டுக் கட்டணம் | 30 | 30 | 30 |
| 9. | பன்னிரெண்டாம் மதிபெண் பட்டியலைச் சரிபார்த்தல் | 50 | | |
| 10. | இதரக்கட்டணம் | 35 | 35 | |
| 11. | அறிந்தேற்புக் கட்டணம் (சி.பி.எஸ்.இ) | 200 | | |
| 12. | பல்கலைக் கழக (சென்னை நீங்கலாக) மாணவியர் அங்கீகரிப்புக் கட்டணம் | | 30 | 30 |
| 13. | முன்னாள் மாணவர் சங்க கட்டணம் | 20 | 20 | |
| 14. | மொத்த கட்டணம் | 895 | 555 | 770 |

# ஆண்டு முழுமைக்குமான கட்டண விவரம்

| | பிரிவு | கல்விக் கட்டணம் | நுழைவுக் கட்டணம் | உடற்பயிற்சி விளையாட்டுக் கட்டணம் | எழுது பொருள் கட்டணம் | நூலகக் கட்டணம் | கல்லூரிப் பேரவைக்கட்டணம் | கல்லூரி ஆண்டுமலர் கட்டணம் | மருத்துவ சோதனைக் கட்டணம் | கல்லூரி நாள் விழாக் கட்டணம் | கல்லூரிக் கையேட்டுக் கட்டணம் | அறிவியல் கட்டணம் | பல்கலைக் கழக கட்டணம் | மொத்த கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| பி.ஏ. | - | - | 2 | 100 | 79 | 29 | 5 | 17 | 5 | 15 | 15 | 0 | 695 | 962 |
| பி.எஸ்ஸி. வேதியியல் | IV | - | 2 | 100 | 79 | 29 | 5 | 17 | 5 | 15 | 15 | 290 | 695 | 1252 |
| பி.எஸ்ஸி. சிறப்பு விலங்கியல் மற்றும் உயிர்த்தொழில் நுட்பவியல் துறை | IV | - | 2 | 100 | 79 | 29 | 5 | 17 | 5 | 15 | 15 | 210 | 695 | 1172 |
| பி.காம். | - | - | 2 | 100 | 79 | 29 | 5 | 17 | 5 | 15 | 15 | 0 | 695 | 962 |
| எம்.ஏ. | VII | 500 | 2 | 100 | 79 | 29 | 5 | 17 | 0 | 15 | 15 | 0 | 525 | 1287 |
| எம்.ஃபில். | | 400 | 2 | 100 | 79 | 367 | 5 | 17 | 0 | 15 | 15 | 0 | 740 | 1740 |

## கல்லூரிச் சேர்க்கை விதிகள்

1. கல்லூரியில் சேரும் மாணவியர் அனைவரும் தாங்கள் இறுதியாகக் கல்வி பயின்ற பள்ளி, கல்லூரியின் மாற்றுச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

   அதில்

   1. மாணவியின் முழுப்பெயர்,
   2. சேர்க்கைப் பதிவேட்டில் குறித்துள்ளபடி பிறந்த தேதி,
   3. நிறுவனத்தில் சேர்ந்த தேதி, அதை விட்டு விலகிய தேதி ஆகியன பற்றிய விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

2. கல்லூரியில் சேர்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவியர் இரண்டு புகைப்படங்களைக் கொடுக்க வேண்டும்.
3. கல்லூரி திறக்கும் நாளன்றோ அல்லது அனுமதிச்சீட்டில் குறிக்கப்பட்ட நாளுக்கு முன்போ, முதல் தவணைப் பணம் அல்லது அப்பருவக் கட்டணம் செலுத்தப்பட்டாலொழிய எந்த மாணவியும் கல்லூரியில் இடம் பெற முடியாது.
4. ஒருமுறை கட்டப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது.
5. தவறான தகவல்களைக் கொடுத்துக் கல்லூரியில் சேர்ந்ததாக அறிய நேர்ந்தால் மாணவியர் உடனடியாகத் தாம் செலுத்திய அனைத்துக் கட்டணங்களையும் இழப்பதோடு கல்லூரியினின்று நீக்கவும் படுவர்.
6. கல்லூரிக்குரிய கட்டணங்கள் அனைத்தையும் செலுத்தி முடித்த பின்னரே அந்த ஆண்டின் இறுதியில் மாற்றுச் சான்றிதழ் பெறலாம். பல்கலைக் கழக விதிகளுக்குட்பட்டு அவருடைய நடத்தையும் முன்னேற்றமும் நிறைவாக அமைந்தால் மட்டுமே சான்றிதழ் வழங்கப்படும்.
7. கல்வியாண்டின் இரண்டு பருவங்கள் எந்த ஒரு பருவத்திலேனும் முதல் ஐந்து வேலை நாட்களில் ஏதேனும் ஒரு நாளிலேனும் வகுப்பிற்கு வருகை தந்திருந்தால் கல்லூரிக் கட்டணங்களைச் செலுத்தினாலொழிய மாற்றுச் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது.
8. கல்லூரிப் பருவத்தின் இடையில் விலகும் மாணவியர் பருவக் கட்டணத்தைத் திருப்பிப் பெற இயலாது.

## உதவித் தொகைகள்

மெட்ரிக் வகுப்புக்கு மேற்பட்ட உயர்நிலை வகுப்பில் பயிலும் மாணவியர் பல்வேறு மைய, மாநில அரசு உதவித் தொகைக்குத் தக்கவராவார். அத்தகு பல்வேறு உதவித் தொகைகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மாணவிகள் 75% வருகைப்பதிவு பெற்றால் தான் உதவித் தொகை பெறத் தகுதியுடையவராகிறார்.

